DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ராஜலிங்கம் | Father/Husband Name : பொன்னுச்சாமி |
| Age : 61 | Village : பெத்துரெட்டிபட்டி |
| Taluk : | Calling : எடை நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 Apr 2026 15:39

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் பெத்துரெட்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கோவில்பட்டி – சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சாலைக்கு மேற்கு பக்கம் விஜய் என்ற பெயரில் எடை நிலையம் வைத்து தொழில் செய்து வருகிறேன். அதற்கு அருகே ஆரியாஸ் ஹோட்டல் இருக்கிறது.

2. தேதி, ஞாபகம் இல்லை. 2021ம் ஆண்டு 8வது மாதம் இரவு 10.50 மணியளவில் நான் என்னுடைய எடைநிலையத்திற்குள் உறங்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஆரியாஸ் ஹோட்டலில் வேலை செய்யும் நபர்கள் வந்து சாலையில் விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும் அதை பார்ப்பதற்கு டார்ச் லைட் வேண்டும் என்று கேட்டார்கள். நான் வெளியே வந்து பார்த்தபோது புல்லட் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அந்த வாகனத்தின் மீது கிடந்தார். அவர் மீது வேறொரு வாகனம் ஏறி இறங்கியிருந்தது. அதனால் அவருடைய உடல் சிதைந்து இருந்தது. அவர் இறந்துபோய் கிடந்தார். அவருடைய செல்போனை எடுத்து Father என்று பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிற்கு போன் செய்து விவரத்தை கூறினேன். அந்த நபர் மீது என்ன வாகனம் மோதியது என்று எனக்கு தெரியாது.

3. இறந்துபோனவரின் தந்தை மறுநாள் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவம் பற்றி விசாரித்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** –

4. கடந்த 16.08.2021ம் தேதி இரவு 10.45 மணிக்கு என்னுடைய கடை முன்பு நின்று கொண்டிருந்த போது, இந்த வழக்கு எதிரி லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ஸ்ரீதர் என்பவர் ஓட்டி வந்த TN 72 G 0303 பதிவெண் கொண்ட ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தின் மீது கோவில்பட்டி – சாத்தூர் ரோட்டில் மோதி விபத்து ஏற்படுத்திய சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

15 Apr 2026 15:48

Judicial Magistrate 2, Sattur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கருத்தப்பாண்டி என்ற பாண்டி | Father/Husband Name : குருசாமி |
| Age : 30 | Village : ஓ.மேட்டுப்பட்டி |
| Taluk : | Calling : டீ கடையில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 Apr 2026 15:50

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் ஓ.மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் உப்பத்தூர் சந்திப்பில் உள்ள திருப்பதி டீ ஸ்டாலில் வேலை செய்து வருகிறேன்.

2. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் இரவு 10.30 மணியளவில் கோவில்பட்டி – சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு நபர் அவருடைய ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் உப்பத்தூர் ஜங்சனுக்கு முன்பாக சாத்தூர் நோக்கி வந்துகொண்டிருந்தபோது அவர் சாலையில் நிலை தடுமாறி சாலையில் போட்டிருந்த வெள்ளை கோடு அருகே விழுந்துவிட்டார். அவர் ரோட்டிலிருந்து எழுந்து நிற்பதற்குள் பின்னால் அதே திசையிலிருந்து வந்த லாரி அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டு லாரி நிற்காமல் சென்றுவிட்டது. இதனால் இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு தலை நசுங்கிவிட்டது, உடலில் கை, கால்கள் முறிந்துவிட்டன, அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனர் பற்றியோ, லாரியின் பதிவெண் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. பின்னர் காயம்பட்ட அந்த நபரை தனியார் அவசர ஊர்தியில் அனுப்பி வைத்தோம்.

3. இந்த விபத்து எதனால் நடைபெற்றது என்றால் விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநர் அதிவேகமாக லாரியை ஓட்டியதே விபத்துக்கு காரணம். இந்த விபத்தால் அந்த நபர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்தது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

4. போலீசார் என்னை விசாரணை செய்தபோது நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் கூறினேன் என்றால் சரிதான். வழக்கு சம்வம் நடைபெறும்போது நான் என்னுடைய டீக்கடைக்கு முன்பாக நின்று கொண்டிருந்தேன். நான் சம்பவத்தின் போது வேலை செய்து வந்த டீக்கடை சாலைக்கு கிழக்கு பக்கம் இருக்கிறது. அந்த டீக்கடையில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 150 அடி தொலைவு இருக்கும். வழக்கு சம்பவம் நடைபெற்ற நான்கு வழி சாலையில் கிழக்கு பக்கம் சர்வீஸ் சாலை இருக்கிறது என்றாலும் அதற்கும் கிழக்கு பக்கம் தான் நான் வேலை செய்த டீக்கடை இருக்கிறது என்றாலும் சரிதான். வழக்கு சம்பவ இடம் அருகே மின்விளக்கு உண்டா என்றால் கிடையாது.

5. நான் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் நான் சாலையை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தேன். போலீசார் என்னை விசாரித்த போது

நான் சாலையை கடப்பதற்காக நின்று கொண்டிருந்த போதுதான் சம்பவம் நடைபெற்றது என்று நான் கூறினேனா என்றால் இல்லை. இறந்து போன நபர் கவனமாக வாகனத்தை ஓட்டியிருந்தால் இந்த விபத்து நடைபெற்றிருக்காது என்றால் சரிதான். வழக்குவ சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சுமார் 20 நபர்கள் கூடியிருப்பார்கள். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

6. போலீசார் என்னை விசாரித்த போது வழக்கு சம்பவம் இரவு 10:30 மணிக்கு நடைபெற்றது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு போலீசார் தயவு வேண்டுமென்பதற்காக போலீசார் கேட்டுக் கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

15 Apr 2026 16:02

Judicial Magistrate 2, Sattur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ராமர் | Father/Husband Name : குத்தாலிங்கம் |
| Age : 41 | Village : கண்மாய் சூரங்குடி |
| Taluk : | Calling : டீக்கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 Apr 2026 16:06

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் கண்மாய் சூரங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் உப்பத்தூர் விலக்கில் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன்.

2. சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்னர் காலை 08.00 – 09.00 மணியளவில் உப்பத்தூர் விலக்கில் வைத்து முந்தைய தினம் இரவு விபத்து நடந்தது சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து என்னிடம் சாட்சிக்காக கையொப்பம் பெற்றார்கள். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. எனக்கு எழுத படிக்க தெரியாது. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஒரு தாளில் ஒரு கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

15 Apr 2026 16:07

Judicial Magistrate 2, Sattur.